2014 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 356, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

356—

சொந்தக் கட்டடம்

20528*—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூரிலுள்ள உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதியில் செயல்பட்டு வரும் கோட்டூர் உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

முற்பகல் 10-45

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றிய உதவித் தொடக்கக் கல்வி அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் போதிய வசதிகள் இல்லாமல் இயங்கி வருகிறது. அந்த ஒன்றியத்தில் 85 ஆரம்பப் பள்ளிகளும், 29 நடுநிலைப் பள்ளிகளும், ஆக மொத்தம் 114 பள்ளிகளில் 364 ஆசிரியர்கள், ஆசிரியைகள் பணியாற்றி வருகிறார்கள். உதவித் தொடக்கக் கல்வி அலுவலகம், மாடியில் போதிய வசதி இல்லாமல் உள்ளது.*

[2014 ஆகஸ்ட் 6

கோட்டூர், பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகம் அருகில் அரசு புறம்போக்கு இடம் உள்ளது. ஆகவே, அந்த இடத்தைக் கண்டறிந்து, அங்கே உதவித் தொடக்கக் கல்வி அலுவலகம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதியில், திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை மற்றும் கோட்டூர் ஆகிய மூன்று இடங்களில் உதவித் தொடக்கக் கல்வி அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. கோட்டூர் உதவித் தொடக்கக் கல்வி அலுவலகம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. சொந்தக் கட்டடம் கட்ட பின்வரும் நிபந்தனைகளை நிறைவு செய்யவேண்டும். ஒன்றியத்தில் அரசுக் கட்டடங்கள் ஏதும் காலியாக இல்லை என்பதை உறுதி செய்து கொள்ளவேண்டும். உதவித் தொடக்கக் கல்வி அலுவலகக் கட்டடம் கட்டுவதற்குப் போதுமான காலியிட வசதி இருக்க வேண்டும். உதவித் தொடக்கக் கல்வி அலுவலகக் கட்டடம் கட்டுவதற்காகத் தேர்வு செய்யப்பட்ட காலியிடத்தை மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் பதவியின் பெயரில் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். தேர்வு செய்யப்பட்ட காலியிடம் புறம்போக்கு நிலமாக இருப்பின் அவ்விடத்தில் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு வருவாய்த் துறையின் அனுமதி பெறவேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலே வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாததால் தற்போது திருத்துறைப்பூண்டி தொகுதிக்குட்பட்ட கோட்டூர் உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட இயலாத நிலை உள்ளது. கோட்டூர் உதவித் தொடக்கக் கல்வி அலுவலகக் கட்டடம் கட்ட பகுதி-2 திட்டத்தின்கீழ் நிதிநிலையைப் பொறுத்து கட்டப்படவும் அல்லது சட்டமன்ற உறுப்பினர் தனது தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் நிதியொதுக்கித் தந்தால் சட்டதிட்டங்களுக்குட்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, கோட்டூர் உதவித் தொடக்கக் கல்வி அலுவலகக் கட்டடம் கட்ட நடவடிக்கை

2014 ஆகஸ்ட் 6]

மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றிய உதவித் தொடக்கக் கல்வி அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கான இடம் 2012-2013 ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்டு, நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. திருத்துறைப்பூண்டி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில், வட்டார வள மைய அலுவலகத்தின் அருகில் கட்டடம் கட்டுவதற்கான இடம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தேர்வு செய்யப்பட்டும் கட்டடம் இன்னும் கட்டப்படாமல் உள்ளது. ஆகவே, அந்த இடத்தில் திருத்துறைப்பூண்டி உதவித் தொடக்கக் கல்வி அலுவலகம் கட்டுவதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அலுவலகம் கட்டுவது குறித்து துறையின் மூலமாக ஆய்வு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டவாறு நிதியொதுக்கப்பட்டிருந்தால், உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, அந்தக் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 357, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*